THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | **CC.No.120/2019** | **PW.1** |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| Name | :திருமதி.ஏஞ்சல்சோபிதா | |
| Husband's Name | : திரு.எஸ்தாக் செல்வகுமார் | |
| Village | : கள்ளிகுளம் | |
| Taluk | : | |
| Employment | : இல்லதரசி | |
| Age | : | Date:25.11.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused A3 present. A1 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed, A2 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed, A4 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed.)**

**முதல் விசாரணை :–**

1. நான் கள்ளிகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லதரசியாக உள்ளேன். 1வது எதிரி இன்று ஆஜரில் இல்லை. அவரை பார்த்தால் எனக்கு தெரியும். ஆஜர் இல்லாத மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. ஆஜர் 3வது எதிரியை எனக்கு தெரியாது. **(சாட்சி 3 வது எதிரியை பார்த்து தெரியாது என்று அடையாளம் காட்டுகிறார்).** 18.08.2014 ஆம் தேதி இரவு 11.00 மணியளவில் நான் எனது வீட்டில் படுக்கையறையில் படுத்திருந்தேன். எனக்கு தலைவலி மற்றும் சக்கரைவியாதி உள்ளதால் என்னால் தூங்க இயலவில்லை. அப்போது 1வது எதிரி என் அறைக்குள் நுழைந்து, எனது தாலி செயினைபறித்தார், நான் திரும்பி பார்ப்பதற்குள் தாலி செயினை பறித்துக் கொண்டு அங்கிருந்த சென்றுவிட்டார். தாலி மட்டும் எங்கள் வீட்டு ஏணிபடியில் கீழே கிடந்தது. அன்றை தினம் பௌர்ணமி தினம் என்பதால் வெளிச்சமாக இருந்தது. 1வது

எதிரி எங்கள் வீட்டு மாடிப்படி வழியாக ஏறி, பக்கத்து வீட்டு வழியாக வெளியே சென்று, அடுத்த தெருவான நவமணி தெருவில் ஒளிந்திருந்தார்.

2. நடந்த சம்பவத்திற்காக மறுநாள் காலையில் எதிரி மீது வள்ளியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் **(அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிரி பறித்து சென்ற தங்க செயின் சுமார் 7 3/4 பவுன் எடை உள்ளதாகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் மேற்படி நகையை நீதிமன்றத்தில் மனு செய்து, பஞ்சநாமாவில் கையெழுத்து செய்து பெற்றுக் கொண்டேன். அந்த பஞ்சநாமா என்னிடம் காட்டப்படுவதுதான் **(அந்த பஞ்சநாமா அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**..

<u>2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

3. நான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளதைதான் போலீஸார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். நான் சம்பவம் நடந்த அன்று இரவே வீட்டின் அருகில் உள்ள ஒரு போலீஸாரிடம் தகவல் சொல்லி, அன்று இரவே போலீஸார் எனது வீட்டிற்கு வந்தார்கள். அப்போது போலீஸார் சம்பவ இடத்தை பார்வையிட்டார்கள். அப்போது நான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளதைதான் அந்த போலீஸாரிடம் கூறினேன். அப்போது அருள்சிலி, அற்புதராஜ் ஆகியோர்கள் போலீஸாரிடம் நான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளதைதான் கூறினார்கள். மேலும் போலீஸாரிடம் நானும், அவர்களும் இதை கூறிதான் அன்று இரவே கையொப்பம் செய்து கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ 1–ல் அன்று இரவு அதை சொல்லிதான் கையொப்பம் செய்தேன். அதன் பிறகு போலீஸார் என்னிடம் எந்த விசாரணையும் மேற்க்கொள்ளவில்லை. நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்த பிறகுதான் என்னை சாட்சியாக இந்த வழக்கில் சேர்த்த விபரம் எனக்கு தெரியும். நான் சாட்சியம் அளித்துள்ளது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**<u>3 வது மற்றும் 4 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

4. 2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை, 3,4 வது எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**<u>1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

5. 1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை இல்லை என்பதால் 1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**<u>மறு விசாரணை :</u>**

6. இல்லை.